தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## 13.09.2012 P.M
## 14.09.2012 A.M

14th Sep 20012

### திருந்திய நெல் சாகுபடி முறையில் விதைப்பண்ணை அமைக்க அறிவுரை

தர்மபுரி: திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் விதைப்பண்ணை அமைக்குமாறு, வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேளாண் விதை சான்று உதவி இயக்குனர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெப்பசலனத்தினால், நல்ல முறையில் மழை பெய்து வருவதை தொடர்ந்து, விவசாயிகள் நெல் பயிர் சாகுபடி செய்வதில், தீவிரம் காட்டி வருகின்றனர். சம்பா பருவத்தில், ஆடு துறை, 39, ஆடுதுறை, 45 மற்றும் ஆடுதுறை, 43 மற்றும் ஐ.ஆர்.,20 ஆகிய ரகங்களை சாகுபடி செய்யலாம்.திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்று விட ஏக்கருக்கு, இரண்டு கிலோ விதையளவு போதுமானது. பாய் நாற்றங்கால் முறையில் அல்லது மேட்டுப்பாத்தி முறையில் நாற்று விட வேண்டும். நல்ல திடமான நாற்றுகள் பெற, டி.ஏ.பி., இட வேண்டும்.வேர் அறுபடாமல், நாற்றுகளை பறிக்க, நாற்று பிடுங்குவதற்கு முதல் நாள் மாலையில், 20 கிலோ ஜிப்சம் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். மறு நாள் காலையில், நாற்றுக்களை பறித்து, நாற்று பறித்த, 30 நிமிடங்களுக்குள் நடவு செய்ய வேண்டும். இவ்வாறு பறித்த நாற்றுக்கள், 15 முதல், 20 நாள் வயது கொண்டதாக இருக்க வேண்டும்.

வரிசைக்கு, வரிசை, 25.5 செ.மீ., இடைவெளியில் மார்க்கர் கருவியை பயன்படுத்தி ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த, 30, 45 மற்றும், 60 நாளில், கோனோகளைக்கருவி மூலம் களை எடுக்க வேண்டும். உர மேலாண்மை இலை வண்ண அட்டைகளை பயன்படுத்தி செய்ய வேண்டும்.மேலுரம் இடும் போது, யூரியாவை குறைத்து பொட்டாஷ் அதிகம் சேர்த்து உரிய காலத்தில், உரிய இடத்தில் இட வேண்டும். தர்மபுரி மாவட்டத்தில், எட்டு வட்டாரங்களில் பொது விதைபண்ணை, ஆத்மா திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் நீர் வள நில

வளத்திட்டத்தின் செயல் விளக்கத்திடல்கள் மூலம் விதைப்பண்ணை, 100 ஹெக்டேரில் அமைத்து அதன் மூலம், 310 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் உற்பத்தி செய்ய வேளாண் துறை திட்டங்கள் தீட்டி செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.
இது வரையில், 16 ஹெக்டேரில் விதை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, வேளாண் அலுவலர்கள், உதவி விதை அலுவலர்களை தொடர்பு கொண்டு, திரந்திய நெல் சாகுபடி முறை மூலம் விதைப்பண்ணை அமைப்பது அறிந்து, அதிக மகசூல் பெற்று தரமான விதை உற்பத்தி செய்து, மாவட்டத்தின் விதை தேவையை பூர்த்தி செய்து பயன் பெறலாம்.

14th Sep 20012

**மழை குறைந்து நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால்பாசன கிணற்றை ஆழப்படுத்தும் விவசாயிகள்**

தியாகதுருகம்:பருவமழை குறைந்து நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு போதிய அளவு பெய்யாமல் ஏமாற்றியது. இதனால் கிராமப்புறங்களில் உள்ள ஏரி, குளங்கள் வறண்டு கிடக்கிறது. அணைகளுக்கும் நீர்வரத்து இன்றி போனதால் கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சங்கராபுரம், ரிஷிவந்தியம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் கிடு கிடுவென குறைந்து வருகிறது.கடந்த சில வாரங்களில் நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கும் அளவுக்கு கூட மழை பெய்யாததால் கிணற்றில் நீர்மட்டம் குறைந்து வருகிறது. போதிய நீர் கிடைக்காமல் பயிர்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. இனி மழையை நம்பி பயனில்லை என்று முடிவு செய்த விவசாயிகள் பலர் தங்களின் பாசன கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.இதற்காக கூடுதல் செலவான போதிலும், சாகுபடி செய்த பயிர் மூலம் ஏற்படும் நஷ்டத்தை கணக்கிடும் போது, பணத்தை செலவிட்டு மேலும் சில அடிக்கு கிணற்றை ஆழப் படுத்த பலரும் முடிவு செய்துள்ளனர். தியாகதுருகம், ரிஷவந்தியம் பகுதியில் விவசாயிகள் பாசன கிணற்றை ஆழப்படுத்தி வருகின்றனர். பல இடங்களில் குடும்ப உறுப்பினர்களே கிணற்றை வெட்டி ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.அதேபோல் கிணற்றின் பக்கவாட்டில் துளையிட்டு போர் அமைத்து கிணற்றில் நீர் சுரக்க வைக்க முயற்சித்து வருகின்றனர். இது ஓரளவு பலனளித்தாலும் மழைபெய்து நீர்நிலைகள் நிரம்பினால் மட்டுமே கிணற்றில் நீர்மட்டம் உயர்ந்து இப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

## 14th Sep 20012 | காவிரி தண்ணீர் பிலிகுண்டு பகுதிக்கு 8,000 கனஅடி வரத்து

கிருஷ்ணகிரி: தமிழகத்துக்கு, செப்டம்பர், 13ம் தேதி முதல், 20ம் தேதி வரை தினமும், பத்து ஆயிரம் கனஅடி தண்ணீர், காவிரி ஆற்றில் திறந்து விடப்படும், என்று கர்நாடக அரசு தெரிவித்தது.

காவிரி நதி நீர் நடுவர் ஆணையத்திடம் உறுதியளித்தபடி, கர்நாடகா அரசு, நேற்று காலை, 10.30 மணிக்கு, கர்நாடகா அணையில் இருந்து, பத்து ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்திருக்க வேண்டும். அறிவித்தபடி, தண்ணீர் திறந்து விடப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய, மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள், பிலிகுண்டு பகுதியில் நேற்று முகாமிட்டிருந்தனர்.காவிரி நீர் பிடிப்பு பகுதியில், நேற்று கனமழை பெய்தநிலையில், இரவு 10 மணியளவில், எட்டு ஆயிரம் கன அடி தண்ணீர் வந்ததாக, மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், கனமழை காரணமாக, காவிரி ஆற்றில் வந்த தண்ணீர்தான் என்று, அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## 14th Sep 20012 | தமிழகம், கேரளாவில் முட்டை விலை 365 காசு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 365 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, தொடர் ஏற்றம் கண்டுவருவது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 360 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் உயர்த்தி, 365 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, தொடர் ஏற்றம் கண்டுவருவது, பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை நிலவரம்:சென்னை, 366 காசுகள், பெங்களூரு, 360 காசுகள், மைசூரு, 360 காசுகள், ஹைதராபாத், 336 காசுகள், மும்பை, 368 காசுகள், விஜயவாடா, 338 காசுகள், கோல்கத்தா, 385 காசுகள், பார்வாலா, 346 காசுகள், டில்லி, 356 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 49 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கிலோ, 64 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

14th Sep 20012

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 365 காசு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 365 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, தொடர் ஏற்றம் கண்டுவருவது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 360 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் உயர்த்தி, 365 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, தொடர் ஏற்றம் கண்டுவருவது, பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை நிலவரம்:சென்னை, 366 காசுகள், பெங்களூரு, 360 காசுகள், மைசூரு, 360 காசுகள், ஹைதராபாத், 336 காசுகள், மும்பை, 368 காசுகள், விஜயவாடா, 338 காசுகள், கோல்கத்தா, 385 காசுகள், பார்வாலா, 346 காசுகள், டில்லி, 356 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 49 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கிலோ, 64 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

14th Sep 20012

## பயிற்சி முகாம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட விதை சான்றளிப்புத்துறை சார்பில், அட்மா திட்டத்தில் விதை விற்பனையாளர்களுக்கான பயிற்சி, ஈரோட்டில் நடந்தது. விதை ஆய்வாளர் சரவணன் வரவேற்று, விதைச் சட்டங்கள் அறிமுகம், விதைச்சட்ட மீறல்களுக்கான தண்டனை குறித்து பயிற்சி அளித்தார். தரமான விதை விநியோகத்தின் முக்கியத்துவம் குறித்து துணை இயக்குனர் அண்ணாதுரை விளக்கினார். ஆய்வாளர் பாலசுப்பிரமணி, விதைச்சான்று அலுவலர் சாமுவேல் பேசினர். இதுபோல், சத்தியமங்கலம், பவானிசாகர், தாளவாடி, நம்பியூர் பகுதியில் உள்ள விதை விற்பனையாளர்களுக்கான விதை ஆய்வு பயிற்சி, சத்தியமங்கலம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது.

14th Sep 20012

## தேயிலை தூளுக்கு கூடுதல் விலை

குன்னூர்: குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் ஏலத்தில், நடப்பாண்டு சராசரியாக ஒவ்வொரு கிலோ தேயிலை தூளுக்கு 30 ரூபாய் கூடுதல் விலை கிடைத்து வருகிறது.குன்னூர் ஏல மையத்தில் கடந்த மூன்று மாதங்களில் தேயிலை தூள் விலை வாரத்துக்கு வாரம் ஏற்றம் கண்டு வருகிறது. இந்த வாரம் விற்பனை அளவு கடந்த வாரத்தை விட கூடுதலாக இருந்தது. கடந்த வாரம் ஒரு கிலோ தேயிலை தூளின் சராசரி விலை 90.10 ரூபாயாக இருந்த நிலையில் இந்த வாரம் ஒரு கிலோவுக்கு 91.82 ரூபாய் விலை கிடைத்துள்ளது. கடந்த 13 வாரங்களில் இந்த விலையே அதிகமானது.அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரங்களினால் வெளிநாட்டு வர்த்தகர்கள் அங்கு முதலீடு செய்ய தயங்கியதாலும், அங்கிருந்து தேயிலை தூள் கிடைக்கும் என்ற சந்தேகம் ஏற்பட்டதால், அவர்கள் குன்னூர் தேயிலை மையத்தில் அதிகளவு தூள் வாங்கினர். இதனால் தேயிலை தூளுக்கு ஏற்பட்ட கிராக்கி ஏற்பட்டதுடன் விலை ஏற்றம் கண்டது.இதனால், கடந்த வாரம் 9.17 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனையான நிலையில், இந்த வாரம் 11.28 லட்சம் கிலோ தூள் விற்பனையானது. இந்த வாரம் 91 சதவீத தூள் விற்பனையானது. இதனால், வர்த்தகம் 8.27 கோடி ரூபாயிலிருந்து இந்த வாரம் 10.36 கோடி ரூபாயாக உயர்ந்தது. கடந்த ஐந்து வாரங்களில் இதுவே அதிகப்படியான வர்த்தகமாகும். இதன் காரணமாக வர்த்தகர்கள் இந்த வாரம் 2.09 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஈட்டியுள்ளனர். இதனால், வர்த்தகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

14th Sep 20012

## ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் பால்வளத்துறை அமைச்சர் ஆய்வு

பெரம்பலூர்: துறைமங்கலம் ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தை தமிழக பால்வளத்துறை அமைச்சர் மூர்த்தி நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பெரம்பலூர் மாவட்டம் துறைமங்கலத்தில் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும், 173 பால் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, தற்போது நாள் ஒன்றுக்கு, ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 899 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் கூட்டுறவு சங்கங்களுக்கு, 17 ஆயிரத்து மேற்பட்ட உறுப்பினர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை வழங்கி வருகிறார்கள்.மாவட்டத்தில் தலா, 5,000 லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட தொகுப்பு பால்

குளிர்விப்பான்கள், உடும்பியம் (ஏ.மேட்டூர்), பசும்பலூர், நூத்தப்பூர், சிறுவயலூர், பெரியம்மாபாளையம் (பூலாம்பாடி), துங்கபுரம், வயலப்பாடி, அம்மாபாளையம், நாட்டார்மங்கலம், நமையூர், எழுமூர் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட உள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தில், பால் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக மாதம், ஒன்றுக்கு, பால் உற்பத்தியாளர்களுக்கு, 6.18 கோடி ரூபாய் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. மூன்று மாதங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு, 406 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் வழங்கப்பட்டுள்ளது.நேற்று துறைமங்கலத்தில் உள்ள ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தை, தமிழக பால்வளத்துறை அமைச்சர் மூர்த்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். பால் குளிரூட்டும் நிலையத்தில் உள்ள கம்பரசர் இயந்திரத்தின் இயக்கத்தினையும், பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொண்டுவரப்படும் பாலின் தரத்தை பரிசோதனை செய்ய அமைக்கப்பட்டுள்ள, கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்ட தானியங்கி பரிசோதனை இயந்திரம், பால் சேமிக்கப்படும் சேமிப்பு கலன், பால் குளிரூட்டும் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ் அஹமது, திருச்சி மாவட்ட ஆவின் பொது மேலாளர் நடராஜன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சகுந்தலா, துணை தலைவர் சேகர், நகராட்சி தலைவர் ரமேஷ், துணை தலைவர் ராமச்சந்திரன், யூனியன்குழு தலைவர்கள் மருதை, கிருஷ்ணகுமார், பி.ஆர்.ஓ., கண்ணதாசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## 13.09.2012 P.M

13th sep 2012 P.M News

13th Sep 20012 | விலை குறைவு : ஈரோடு மஞ்சள் சந்தையில் இன்றைய ஏலம் ரத்து

ஈரோடு, செப்., 13 : ஈரோடு சுண்ணாம்பு ஓடை அருகே உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை மஞ்சள் ஏலம் நடக்கும். ஆசியாவிலேயே மிகப் பெரிய மஞ்சள் சந்தையாக விளங்குவது ஈரோடு மஞ்சள் சந்தையாகும்.

இன்று மஞ்சள் சந்தையில் சுமார் 150 மாதிரிகளை விவசாயிகள் ஏலத்துக்கு வைத்திருந்தனர். ஆனால், நேற்றை விட 1000 ரூபாய் குறைவாக மஞ்சள் ஏலம் எடுக்கப்பட்டது. இதனால் விரக்தி அடைந்த விவசாயிகள் மஞ்சள் ஏலத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டனர்.

13th Sep 20012 | மேட்டூர் அணை நீர்மட்டம் 81.49 ஆக உயர்வு

சேலம், செப்., 13 : சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையின் நீர்மட்டம் 81.49 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் தற்போது 43,458 டிஎம்சி தண்ணீர் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 9,258 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 2,001 கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது.

13th Sep 20012

## வல்லம் வட்டாரத்தில் எண்ணெய் பனை பயிரிடுவோருக்கு ரூ.1 லட்சம் மானியம்

செஞ்சி, செப். 12: செஞ்சி வட்டம் வல்லம் ஒன்றியத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் ஐசோபாம்-எண்ணைய் வித்து மற்றும் தேசிய எண்ணைய்ப்பனை சாகுபடிக்காக ரூ.8 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

÷இது குறித்து வல்லம் வேளாண்மை உதவி இயக்குநர் கே.ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

÷வல்லம் வட்டாரத்தில் புதிதாக எண்ணெய்ப்பனை பயிரிடுவோருக்கு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் இந்த மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன்படி புதியதாக நடவு செய்பவர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.10 ஆயிரம்,

÷பரப்பு அதிகப்படுத்ததலுக்காக ஒரு ஹெக்டேருக்கு ரூ.6 ஆயிரம், சொட்டு நீர் பாசனத்திற்காக ரூ.15 ஆயிரம், புதிய பம்ப் செட் அமைக்க ரூ.10 ஆயிரம், எண்ணெய்ப்பனை வயலில் இதர பயிர்களை ஊடு பயிராகப் பயிர் செய்ய ரூ.10 ஆயிரம்,

÷உரம் மற்றும் பூச்சி மருந்துகளுக்காக ரூ.5 ஆயிரம், மண்புழு மட்கு உரத்தொட்டி அமைக்க ரூ.15 ஆயிரம், புதிய போர்வெல் அமைக்க ரூ.50 ஆயிரம் என மொத்தம் ஒரு ஏக்கருக்கு ரூ.1.21 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

÷இதைத் தவிர 2 ஆண்டு வயதுடைய எண்ணெய்ப்பனை கன்றுகள், 3, 4 ஆண்டு வயதுடைய எண்ணெய்ப்பனை கன்றுகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரசாயன உரங்கள் மற்றும் நுண்ணுயிர் உரங்கள் வழங்கப்படுகின்றன.

÷இத்திட்டத்திற்காக வல்லம் வட்டாரத்திற்கு 2012-13-ம் ஆண்டிற்கு ரூ.8 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

÷எண்ணெய்ப்பனை கன்றுகளை புதியதாக நட விருப்பமுள்ள விவசாயிகள் மற்றும் எண்ணெய்ப்பனை பயிரிட்டுள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்கள் சாவித்ரி(80563-23920), ரவி(94437-94021) மற்றும் காவேரி எண்ணெய்ப்பனை நிறுவன களப் பணியாளர் கார்த்தி(99429-90441) ஆகியோரைத் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம் எனச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 13th Sep 20012 | விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி

ஆரணி, செப். 12: விதைச் சான்று துறை சார்பில் தனியார் விதை உற்பத்தியாளர் பயிற்சி, பெரணமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்றது.
சங்கச் செயலர் எஸ்.ராமசாமி பயிற்சியை தொடங்கி வைத்தார். விதையின் முக்கியத்துவம், விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், விதைச்சான்று நடைமுறைகள் குறித்தும் திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குநர் சு.பேபிவர்தம் விளக்கினார்.
விதைப் பண்ணை அமைத்தல், அதை பதிவு செய்தல், வயலாய்வு செய்தல், விதையை சுத்தம் செய்தல், மாதிரி எடுத்தல் உள்ளிட்டவை குறித்து விதைச்சான்று அலுவலர்கள் பழனி, குமரன் ஆகியோர் விளக்கினர்.

சங்க உதவிச் செயலர் கே.ஏழுமலை மற்றும் அரியப்பாடி, நம்பேடு, நாவல்பாக்கம், அல்லியந்தல், சோழவரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 50 விவசாயிகள் பங்கேற்றனர்.

## 13th Sep 20012 | காவிரி நீர் இன்று மேட்டூர் அணைக்கு வந்து சேரும்: தமிழக அதிகாரிகள்

மேட்டூர், செப். 12: கர்நாடகத்திலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் இன்று(வியாழக்கிழமை) மேட்டூர் அணைக்கு வந்து சேரும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
தமிழகத்திற்கு கர்நாடகம் செப் 12-ந்தேதி முதல் 20-ம் தேதிவரை வினாடிக்கு 10ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்திரவிட்டுள்ளது. ஏற்க்கெனவே கர்நாடகத்தில் உள்ள கபினிஅணை நிரம்பி அங்கிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டுவருகிறது. இந்த தண்ணீர் கடந்த இரண்டுவாரங்களாக மேட்டூர் அணைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில் கர்நாடகத்தில் பெய்துவரும் மழையின் காரணமாக கபினி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அதனால் புதன்கிழமை காலை அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 8,029கனஅடி தண்ணீர் காவிரியில் திறக்கப்பட்டுள்ளது. அதேபோல் கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து வினாடிக்கு 2,327கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை மாலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 9,225கனஅடியாக அதிகரித்துள்ளது. இதில் காவிரியின் உபநதிகளிலிருந்து வரும் நீரின் அளவும் அடங்கும். கர்நாடக அணைகளிலிருந்து கூடுதலாக வெளியேற்றப்பட்டுள்ள தண்ணீர் இன்று(வியாழக்கிழமை) மேட்டூர் அணைக்கு வந்துசேரும் வாய்ப்புள்ளது என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

13th Sep 20012 | சம்பா பருவ நெல் சாகுபடிக்கு விதை கையிருப்பு

தேனி, செப். 12: தேனி மாவட்டத்தில் சம்பா பருவ நெல் சாகுபடிக்கு தேவையான விதை வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் சம்பா பருவ நெல் சாகுபடிக்கு வரும் அக்டோபர் மாதம் முதல் மற்றும் 2-வது வாரத்தில் மத்திய கால நெல் ரகங்களாகிய கோ 43, ஏ.டீ.டி., 39, ஏ.டீ.டி., 45 மற்றும் வீரிய ரக நெல் விதைகளை பயன்படுத்தி நாற்றாங்கால் அமைக்கலாம். மாவட்டத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் தற்போது கோ 43 ரக விதை 25.500 டன், ஏ.டீ.டி., 39 ரகம் 18.400 டன், ஏ.டீ.டி 45 ரகம் 11.900 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தனியார் விதை விற்பனை நிலையங்களில் வீரிய ஒட்டுரக நெல் விதைகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

# இன்றைய வேளாண் செய்திகள்

## 13.09.2012 P.M

| 13th Sep 20012 | முசிறியில் விவசாயிகளுக்கு இலவச நெல் விதை ஏக்கருக்கு ரூ.19,000 மானியம் |
|---|---|

தா.பேட்டை, : முசிறியில் விவசாயிகளுக்கு இலவச நெல்விதை வழங்கப்பட்டது. ஏக்கருக்கு ரூ.19,000 மானியம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முசிறி வேளாண் கோட்டத்தில் முதல்வரின் அறிவிப்புப்படி சம்பா சாகுபடி சிறப்பு தொகுதி திட்டத்தின் கீழ் நாற்றாங்கால் அமைக்க விவசாயிகளுக்கு இலவச நெல்விதை வழங்கும் விழா நடைபெற்றது.

வேளாண் துறை உதவி இயக்குநர் கணேசன் தலைமை வகித்தார். முசிறி ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி கிருஷ்ணன், அய்யம்பாளையம், முசிறி பகுதி விவசாயிகளுக்கு இலவச நெல் விதைகளை வழங்கி திட்டத்தை துவக்கி வைத்தார்.

விழாவில் வேளாண் அதிகாரிகள் பேசுகையில், ஒரு ஏக்கருக்கு ரூ.19,000 மானியத்துடன் இடுபொருள், விதைகள், ஊக்கத்தொகை ஆகியவை முசிறி வட்டாரத்தில் சுமார் 50 ஏக்கர் அளவில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவித்தனர். வேளாண் அலுவலர் முரளிதரன், துணை வேளாண் அலுவலர் கணேசன், உதவி அலுவலர்கள் ராஜ கோபால், கலைச்செல்வன் மற்றும் விவசாயிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

13th Sep 20012

## ரூ.2342 கோடிக்கு விவசாய கடன் ஒதுக்க முடிவு கடன் திட்ட அறிக்கை வெளியீடு

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் வேளாண் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ரூ.2342 கோடி கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் சண்முகம் தலைமை தாங்கினார். கூட்டத்தில் 2012-2013ம் ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. இதன் முதல் பிரதியை சென்னை ரிசர்வ் வங்கி உதவி பொதுமேலாளர் விஜயகுமார் பெற்றுக்கொண்டார்.
திட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஈரோடு மாவட்டத்தில் உள்ள விவசாயிகளையும் விவசாய முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் ரூ.2342.78 கோடி அளவில் விவசாய கடன்கள் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
நீண்டகால விவசாய கடன் திட்டங்களான கிராமப்புற சேமிப்பு கிடங்குகள், நில அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறுந்தொழில் வளர்ச்சிக்காக ரூ.1224.99 கோடியும் பிற முன்னுரிமை கடன்களாக வீடு, கல்வி ஆகியவற்றிக்கு ரூ.827 கோடியும் ஒதுககீடு செய்யப்பட்டுள்ளது.
மொத்தம் ரூ.4394.79 கோடி அளவில் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
இது சென்ற ஆண்டை விட 33.8 சதவீதம் கூடுதலாகும். கூட்டத்தில் கன ரா வங்கி மண்டல மேலாளர் ஜோசப்ஜேம்ஸ்,மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் வெங்கட்டரமணன் உள்ளி ட்ட பலர் கலந்து கொண் டனர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 14.09.2012 A.M

14th Sep 20012

**நாமக்கல் ம  டலத்தில்**
**முட்டை விலை 'கிடுகிடு' உயர்வு**
**365 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல் ம  டலத்தில் ஏற்கனவே முட்டையின் அதிகபட்ச கொள்முதல் விலை 331 காசுகளாக இருந்தது. அது கடந்த மாதம் (ஆகஸ்டு) 28–ந் தேதி 334 காசுகளாக உயர்த்த பட்டது.

அதன்பிறகும் நாமக்கல் மாவட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலை தொடர்ந்து ராக்கெட் வேகத்தில் உயர்ந்து கொ  டே வருகிறது. தற்போது 365 காசுகள் என்ற புதிய உச்சத்தை தொட்டு உள்ளது. கடந்த 15 நாட்களில் மட்டும் நாமக்கல் ம  டலத்தில் முட்டையின் கொள்முதல் விலை 34 காசுகள் வரை உயர்ந்து உள்ளது.

14th Sep 20012

**தமிழகத்தில் இன்று மழை பெய்  ம்**
**வானிலை ஆய்வு மையம் அறிவி  பு**

வெ  ப சலனம் காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. சென்னையில் கடந்த 2 தினங்களாக வெயில் வாட்டி வதைத்து வந்தது. இந்தநிலையில் சென்னையில் நேற்று மாலை இடி  டன் கூடிய மழை பெய்தது.

இந்த திடீர் மழை குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணனிடம் கேட்டபோது, 'வெ  ப சலனம் காரணமாக நாளை (இன்று) தமி முகத்தில் ஒரு சில இடங்களில் இடி  டன் கூடிய மழை பெய்ய வாய்  புள்ளது. சென்னையை பொறுத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காண  படும். நகரின் ஒருசில இடங்களில் இடி  டன் கூடிய கனமழை முதல் மிதமான மழை வரை பெய்ய வாய்  புள்ளது' என்றார்.

நேற்று லகிரியில் 5 செ.மீட்டரும், நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 4 செ.மீட்டர் மழை ம் பதிவாகி உள்ளது. கொடைக்கானல், அரியலூர், கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில், நாக பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை, கோவை மாவட்டம் வால்பாறை, திருவள்ளூர் உள்ளிட்ட இடங்களிலும் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது.

| 14th Sep 20012 | **விதை விற்பனைக்கு உரிமம் பெற வே டும் விதை ஆய்வுத்துறை அறிவி பு** |
|---|---|

விதைகளை உரிமம் இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது, விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் வி ண பித்து விதை விற்பனையாளர்கள் உரிமம் பெற்றுக்கொள்ளலாம் என விதை ஆய்வுத்துறை அறிவித்துள்ளது.

உரிமம்

மதுரை விதை ஆய்வு துணை இயக்குநர் சே.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை:–

உயிருக்கு ஈடான விதைகளை உரிமம் இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. தரமான சான்று அட்டை பொருத்திய விதைகளை மட்டுமே விதை விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு விற்க வே டும். விதை விற்பனைக்கான உரிமம் தமிழ்நாடு அரசின் விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் வழங்க படுகிறது.

விதை விற்பனை செய்ய விரும்புவோர், புதிய உரிமம் பெற ரூ.50ஐ அரசு கணக்கில் செலுத்தி உரிய ஆவணங்களுடன் அனு பினால், ஆய்வுக்கு பின் உரிமம் வழங்க படும். இந்த விற்பனை உரிமம் 3 ஆ டுகளுக்கு செல்லுபடியாக கூடியது.

மூன்று ஆ டுகளுக்கு பின், ரூ.20 செலுத்தி உரிமத்தை புது பித்துக்கொள்ளலாம்.

அரசு நிறுவனங்கள்

விதை விற்பனை செய் ம் அரசு நிறுவனங்களாகிய வேளா மை விரிவாக்க மையங்கள், அரசு சார்பு நிறுவனங்களாகிய தொடக்க வேளா மை கூட்டுறவு சங்கங்கள், தேசிய விதை கழகங்கள், தனியார் விதை விற்பனை மையங்கள், பழச்செடி மற்றும் காய்கறி நாற்று ப ணைகள் என அனைத்தும் உரிமம் பெற்றிருக்க வே டும்.

விதை விற்பனை செய் ம் உரிமம் காலாவதி ஆன பின்பும் விதைகளை விற்பனை செய்தாலோ, உரிமம் இல்லாமல் விதை விற்பனை செய்தாலோ அந்த நிறுவனங்களின் மீது விதை சட்டங்களின் படி நடவடிக்கை எடுக்க படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூற பட்டுள்ளது.

| | |
|---|---|
| 14th Sep 20012 | **பெங்களூரில் திடக்கழிவு மேலா மை திட்டத்தை செயல்படுத்திட**<br>**எடியூர பா தலைமையில் எம்.எல்.ஏ.க்கள் குழுவினர் சேலத்திற்கு "திடீர்" வருகை**<br>**கு பையில் இருந்து உரம் தயாரி பது எ படி? என நேரில் பார்வையிட்டனர்** |

பெங்களூரில் திடக்கழிவு மேலா மை திட்டத்தை செயல்படுத்திட கர்நாடக முன்னாள் முதல்–மந்திரி எடியூர பா தலைமையிலான எம்.எல்.ஏ.க்கள் குழுவினர் நேற்று சேலம் வந்தனர். அவர்கள் கு பையில் இருந்து உரம் தயாரி பது எ படி? என நேரில் பார்வையிட்டனர்.

திடக்கழிவு மேலா மை திட்டம்

சேலம் மாநகராட்சி நிர்வாகத்தால் மாநகரில் தினமும் 300 மெட்ரிக் டன் கு பைகள் சேகரிக்க பட்டு அவை, சேலத்தில் இருந்து 15 கிலோ மீட்டருக்கு அ பால் உள்ள செட்டிச்சாவடியில் அமைந்துள்ள திடக்கழிவு மேலா மை திட்ட ஆலைக்கு கொ டு செல்ல படுகிறது. அங்கு மக்கும் கு பை, மக்காத கு பை என தனித்தனியாக பிரிக்க படுகிறது.

நவீன அறிவியல் முறையில் திடக்கழிவுகளை தரம் பிரித்து உரமாகவும், ஆர்.டி.எ . எரிபொருளாகவும், பிளாஸ்டிக் மூல பொருள்கள் தயாரிக்கவும் எஞ்சிய திடக்கழிவுகள் நிலத்தடி ர் மாசுபடாத வகையில் நிர புவதற்கு உரிய நிர பு கலன், சுத்திகரி பு நிலையம் கட்டி இயக்க பட்டு வருகிறது. குஜராத்தை சேர்ந்த 'என்விரோ புரொடக்ஷன் இன் ராஸ்டரக்சர்' என்ற நிறுவனம் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த நிறுவனம் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சிற பாக இதை செய்து வருகிறது.

எடியூர பா தலைமையிலான குழு வருகை

இந்த நிலையில் கர்நாடகா மாநிலம் பெங்களூரில் இருந்து முன்னாள் முதல்–மந்திரி

எடியூர பா தலைமையில் சுகாதாரத்துறை மந்திரி அரவிந்த் லிம்பாவளி, எம்.எல்.ஏ.க்கள் நிதீஷ் ரெட்டி, சதீஷ் ரெட்டி, விஸ்வநாத் ரெட்டி, விஜயகுமார் மற்றும் ராமசந்திர கவுடா எம்.எல்.சி.(மேல்சபை உறு பினர்) ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று சேலம் வந்தனர். அவர்கள் சேலம் மாநகராட்சி சார்பில் செட்டிச்சாவடியில் இயங்கி வரும் திடக்கழிவு மேலா மை திட்டம் செயல்பாடுகளை நேரில் சென்று ஆய்வு செய்தனர். அ போது மக்கும் கு பை, மக்காத கு பை எ படி தரம் பிரிக்க படுகிறது என்றும், அவற்றில் இருந்து இயற்கை உரம் தயாரிக்க படுவது பற்றி ம், பிளாஸ்டிக் மூலம் பொருட்கள் தயாரிக்க படுவது பற்றி ம் ஆய்வு செய்தனர்.

எடியூர பா மற்றும் குழுவினர் கேட்கும் சந்தேகங்களுக்கு என்விரோ புரொடக்ஷன் இன் ராஸ்டரக்சர் நிறுவன மேனேஜிங் இயக்குனர் நதின் பர்னிச்சர்வாலா விளக்கம் அளித்தார். முன்னதாக எடியூர பா தலைமையிலான குழுவினரை சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி பிரசன்ன வெங்கடேசன், சேலம் உதவி கலெக்டர் சதீஷ் ஆகியோரும் வரவேற்றனர்.

4 இடங்களில் அமை பு

சேலத்தில் திடக்கழிவு மேலா மை திட்ட பணிகளை ஆய்வு செய்த எடியூர பா கூறுகையில், “கர்நாடாகா மாநிலத்தில் தினமும் 3 ஆயிரம் டன் கு பைகள் சேகரிக்க படுகிறது. நாளுக்கு நாள் கு பைகள் அதிகரி பால் விரைவில் 5 ஆயிரம் டன்னை எட்டும் நிலை உள்ளது. எனவே, கு பை பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி எடுத்து வருகிறோம். அ போது குஜராத்தை சேர்ந்த தனியார் நிறுவனம் இந்தியாவில் 23 இடங்களில் திடக்கழிவு மேலா மை திட்டத்தை சிற பாக செயல்படுத்தி வருவதாக அறிந்தோம். அதில் ஒன்று சேலத்தில் செயல்படுவதை அறிந்து அ பணிகளை நேரில் பார்வையிடவே வந்தோம். கர்நாடகா மாநிலத்தில் 4 இடங்களில் திடக்கழிவு மேலா மை திட்டத்தை செயல்படுத்திட முடிவு செய்துள்ளோம்“ என்றார்.

முன்னதாக பெங்களூரில் இருந்து தனி விமானத்தில் புற பட்ட எடியூர பா குழுவினர் சேலம் காமலாபுரம் விமான நிலையம் வந்தனர். அவர்களை பாரதீய ஜனதா கட்சி மாநில பொதுச்செயலாளர் ஆடிட்டர் ரமேஷ், முன்னாள் எம்.எல்.ஏ. லட்சுமணன், சேலம் மாவட்ட பொதுச்செயலாளர் கோபிநாத், மாவட்ட தலைவர் மோகன், அமை பு செயலாளர் ரகுபதி உள்பட நிர்வாகிகள் வரவேற்றனர்.

எடியூர பா சேலம் வருவதையொட்டி காவிரி பிரச்சினைக்காக அசம்பாவித சம்பவம் ஏதும் நடந்திராத வகையில் சேலம் மாநகர போலீஸ் கமிஷனர் மஹாலி தலைமையில் பலத்த போலீஸ் பாதுகா பு போட பட்டிருந்தது.